**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.C.C.13/2016**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Tamilarasi | Prosecution | P.W-1, L.W-1 |
| Husband Name | Nambi | Defence | |
| Village | NSP nagar, Thenpathy | Taluk Sirkali | |
| Calling | | Religion | |
| Age | 50/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day
**29.01.2024.**
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. பார்த்ததில்லை. அவர்கள் தான் திருடியதாக காவல் அதிகாரி எங்களிடம் கூறினார். கடந்த 04.05.2013 அன்று காலை 11.00 மணிக்கு நான் அண்ணனை வீட்டை பார்த்து கொள்ள சொல்லிவிட்டு ஊருக்கு சென்றுவிட்டேன். அன்றைய தினம் இரவு என் அண்ணன் லைட் போட்டு இருந்ததை மறுநாள் காலை அணைக்க சென்றபோது வீடு திறக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது என்று எனக்கு போன் மூலம் என் அண்ணன் தகவல் சொன்னார். எனது மகனை அழைத்துக் கொண்டு ஊருக்கு உடனே காலை 8.30 மணிக்கு எல்லாம் வந்துவிட்டோம். வீட்டிற்கு வந்து பார்த்தபோதுதான் பீரோ உடைக்கப்பட்டு 100 பவுனுக்கு மேலே நகை காணாமல் போயிருந்தது. அந்த நேரத்தில் இருந்த பதற்றத்தில் 86 பவுன் நகையும் பணம் 1 லட்சத்து 40 ஆயிரம் திருடு போயிருந்தது சம்மந்தமாக புகார் கொடுத்திருந்தேன். ஓம் என்று செயின் 9 பவுன், அரை பவுன் மோதிரம் 4, பவுன் கலந்த கைக்கடிகாரம் 2, 2.5 பவுன் செயின் 1, ஆரம் 8 பவுன், நெக்லஸ் 4 பவுன், காசு மாலை 10 பவுன், 1 பவுன் மோதிரம் 3, பிரேஸ்லட் 3 பவுன், பிரேஸ்லட் 2 பவுன், தங்கக் கொலுசு 6 பவுன், வளையல் 2 பவுன் வீதம் 8 வளையல், கல்தோடு 1 பவுன் வீதம் 2 செட், தோடு ஜிமிக்கி 1 பவுன், மாட்டல் 1

பவுன், இரட்டை வட செயின் 5 பவுன், சலங்கை தோடு 2 செட் 2 பவுன், குழந்தை செயின் 6 செயின் தலா 2 பவுன் வீதம் 12 பவுன், குழந்தை வளையல் 3 பவுன், மேலும் சிறு சிறு நகைகள் காணாமல் போயின. நான் நீதிமன்றத்தில் மனு செய்து 15 பவுன் நகை மட்டுமே நான் திரும்பப் பெற்றேன். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரம் தெரியும். அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.C.C.13/2016**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Kumar | Prosecution | P.W-2, L.W-2 |
| Father Name | Ramachandiran | Defence | |
| Village | VOC st, Thenpathy | Taluk Sirkali | |
| Calling | | Religion | |
| Age | 56/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day
**29.01.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி ரவி எனக்கு தெரியும். எங்கள் தெருவில் குடியிருந்து காலி செய்து சென்று விட்டார். எதிரி குருமூர்த்தியை தெரியாது. அவர்கள் இருவர் தான் திருடியதாக காவல் அதிகாரி எங்களிடம் கூறினார். கடந்த 04.05.2013 அன்று காலை 11.00 மணிக்கு என் தங்கை என்னிடம் வீட்டை பார்த்து கொள்ள சொல்லிவிட்டு ஊருக்கு சென்றுவிட்டார். அன்றைய தினம் இரவு நான் லைட் போட்டு இருந்ததை மறுநாள் காலை அணைக்க சென்றபோது வீடு திறக்கப்பட்டு இருந்தது தெரிய வந்து போன் மூலம் என் தங்கைக்கு தகவல் சொன்னேன். என் தங்கை அவரது மகனை அழைத்துக் கொண்டு ஊருக்கு உடனே காலை 8.00 மணிக்கு எல்லாம் வந்துவிட்டார் . வீட்டிற்கு வந்து பார்த்தபோதுதான் பீரோ உடைக்கப்பட்டு 86 பவுன் நகையும் பணம் 1 லட்சத்துக்கு மேல் திருடு போயிருந்தது சம்மந்தமாக புகார் கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.